பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 09 திங்கட்கிழமை 26.08.2019 கதிர் 294

### இனி இது ரகசியம் அல்ல!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மிக நெருங்கிய ஆதரவாளர் ஒருவரைச் சந்தித்தேன். சில விடயங்களைக் கூறினார். வாசகர்களுக்குத் தகவலுக்காக அவற்றை இங்கு பரிமாறிக் கொள்கிறேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இனி பக்கம் 02 »

# என் மீது முழு நம்பிக்கை வைத்து கோட்டாவுக்கு வாக்களியுங்கள்!

## யாழ். வந்த திஸ்ஸ விதாரண பகிரங்கக் கோரிக்கை

(எஸ். நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், ஓக. 26

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளராக என்னைத் தற்போது மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் என் மீது நம்பிக்கை வைத்துத் தமிழ் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கவேண்டும்

– இவ்வாறு கோரிக்கை விடுத்தார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. பக்கம் 11 »

## அமெரிக்க நீதிமன்ற வழக்கில் இராஜதந்திர விலக்குரிமை கோருகின்றார் கோட்டாபய

கொழும்பு, ஓக. 26

2009 ஜனவரியில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க சித்திரவதை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்காவில் தாக்கல் செய் பக்கம் 11 »

## கை - மொட்டு பேச்சு மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையிலான பரந்துப்பட்ட கூட்டணியமைத்தலுக்கான இரு தரப்பு பேச்சுக்கள் நாளை நடைபெறவுள்ளன. பக்கம் 11 »

## சுமந்திரனின் பிரேரணை உள்நோக்கம் கொண்டது

### விக்கினேஸ்வரன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஓக. 26

மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டில் நடைபெற வாய்ப்புக்கள் இல்லை. கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள தனிநபர் பிரேரணை உள்நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டது பக்கம் 11 »

## சவேந்திர சில்வா நியமனத்தில் சர்வதேசம் தலையிடமுடியாது

### யாழ்ப்பாணத்தில் அடித்துக் கூறினார் திஸ்ஸ விதாரண

யாழ்ப்பாணம், ஓக. 26

ஐ.நாவில் ஏனைய நாடுகள் போலவே இலங்கையும் அமெரிக்காவும் அங்கம் வகிக்கின்றன. எந்த ஒரு நாடும் எமது நாட்டு இறையாண்மை விடயத்தில் தலையிட முடியாது. சவேந்திர சில்வாவின் நியமனத்தில் அரசைத்தவிர எவரும் தலையிட முடியாது. பக்கம் 11 »

## தெரிவுக் குழுவில் முன்னிலையாக மைத்திரிக்கு எழுத்துமூல அழைப்பு

கொழும்பு, ஓக. 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னிலையாகுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எழுத்துமூலமாக இந்த அறிவித்தல் வழங்கப்பட் பக்கம் 11 »

## சஜித்தின் ஆதரவை தகர்க்க ரணில் புதிய காய்நகர்த்தல்!

### ஐ.தே.கவின் செயற் குழுவுக்கு புதிதாக 30 பேரை நியமிக்கவுள்ளார்

கொழும்பு, ஓக. 26

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க ஆட்சேபனை தெரிவிக்கும் முக்கியமான அமைச்சர்களுடன் பிரதமர் ரணில் மந்திராலோசனை நடத்தியுள்ளார்.

இதன்படி 90 ற்கும் மேற்பட்ட உறுப்பினர் பக்கம் 11 »

## மைத்திரிக்கு நன்றி கூறுகிறார் கோட்டா!

கொழும்பு, ஓக. 26

போர்க் களத்தில் வல்லமை பொருந்திய தளபதியாகச் செயற்பட்ட சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதி பதவிக்கு நியமித்த பக்கம் 02 »

## ஜனாதிபதியின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்த முடியாது

### கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஓக. 26

ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த பக்கம் 02 »

## கோட்டாபயவைக் கண்டு தமிழர் பயப்படவில்லை

### கூறுகின்றார் சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம், ஓக 26

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை பார்த்து தமிழ் மக்கள் பயப்படவில்லை. அவர் பத்து தலை இராவணன் போல வந்தாலும் நாம் அவரை எதிர்கொள்ள தயாரா பக்கம் 11 »

## மோடியுடன் முக்கிய பேச்சு நடத்த அடுத்த வாரங்களில் டில்லி பறக்கின்றது கூட்டமைப்பு!

கொழும்பு, ஓக. 26

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அரசுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு அடுத்து வரும் வாரங்களில் புதுடில்லிக்குப் பக்கம் 02 »

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்: சுயாதீன ஆணைக்குழு வேண்டும்!

### பேராயரின் கோரிக்கை நியாயமானது என்கிறார் கோட்டா



கொழும்பு, ஓக. 26

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையால் விடுக்கப்பட்ட கோரிக்கை நியாயமானது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி பக்கம் 02 »

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அடுத்த தவணைக்குப் பதவி கிடைக்காது – கிட்டாது – என்பது உறுதியாகிவிட்டது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அதிகாரத்துக்கு வரக் கூடிய தரப்புகளின் முதுகில் குத்தித்தான் தனது அரசியல் வாழ்வை முன்னெடுத்திருக்கின்றார் மைத்திரியார்.

ஒரு பக்கம் மஹிந்தர். மறுபக்கம் பிரதமர் ரணில்.

ஜனாதிபதி பதவிக்கு வருவதற்காக மஹிந்தர் முதுகில் குத்தியாயிற்று. கிடைத்த ஜனாதிபதிப் பதவியின் திமிரினால் ரணிலையும் பல தடவைகள் எட்டி உதைத்தாயிற்று.

இந்த இரண்டு பேரில் ஒருவரின் கை உயர்ந்தால்–ஓங்கினால் –தமது எஞ்சிய அரசியல் வாழ்க்கை அதோகதி என்பது மைத்திரியாருக்குத் தெரியும்.

அதனால், இந்த இரண்டும் இல்லாமல் மூன்றாவது தரப்பான சஜித் பக்கம் அதிகம் நாடுகிறார் அவர்.

எதிர்வரும் 3ஆம் திகதி தாம் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியின் மாநாட்டில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமது கட்சியின் நிலைப்பாட்டை அவர் அறிவிக்க வேண்டும். அதற்கு முன்னர் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸா என்று அறிவிக்கப்பட்டால் அவருக்குப் பின்னால் போக மைத்திரியார் தயார். ஆனால் அந்தத் திகதிக்கு முன்னர் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அறிவிப்பதற்கு இடமளிப்பதில்லை என்பதில் ரணில் உறுதியாக இருக்கின்றார்.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத இக்கட்டில் சிக்கி நிற்கும் மைத்திரியார், சு.கவின் மாநாட்டை கடைசி நேரத்தில் பிற்போட்டால் என்னவென்று சிந்திக்கின்றார்.

இதற்கிடையில், ஐ.தே.கட்சித் தலைவர் என்ற முறையில் தமக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவுக்கு மேலும் முப்பது பேரை ரணில் விக்கிரமசிங்க நியமனம் செய்யவிருக்கின்றார் என்று தெரிகின்றது. இது தொடர்பான ஆவணங்களை அமைச்சர்கள் திலக் மாரப்பன, ரவி கருணாநாயக்கா ஆகியோர் இன்று தேர்தல்கள் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இப்படி கட்சியின் செயற்குழுவுக்குத் தமக்கு மிக நம்பிக்கையான மேலும் முப்பது பேரை ரணில் நியமித்தால், கட்சியின் செயற்குழுவும், நாடாளுமன்றக் குழுவும் கூடி கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் போது ரணிலின் கை மிகப் பலமாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.

ஆகையினால் ரணில் அல்லது அவரது பரிந்துரையின் பேரில் கரு ஜெயசூரியவே கட்சியின் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

– இப்படி அந்த ஆதரவாளர் கூறினார்.

அப்படியானால் மங்கள சமரவீர போன்றோர் சஜித் பிரேமதாஸா பக்கம் நிற்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டேன். அதற்கும் காரணம் – விளக்கம் – சொன்னார் அவர்.

மங்கள சமரவீர நாட்டின் வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் போன்ற பதவிகளை வகித்து விட்டார். இதற்கு மேல் பிரதமராவதோ ஜனாதிபதி பதவிக்கு வருவதோ அவரைப் பொறுத்தவரை தூர்லபமே.

இப்போது அவரது இலக்கு அடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் ஆவதுதான். சஜித்தை ஜனாதிபதியாக்கினால், சொற்ப காலம் தம்மைப் பிரதமர் பதவியில் அமர்த்தி விட்டு இலங்கையின் முன்னாள் பிரதமர், முன்னாள் நிதி அமைச்சர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் என்ற பெயர்களுடன் அடுத்த ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவில் தாம் களம் இறங்க சஜித் உதவுவார் என மங்கள எதிர்பார்க்கின்றார். இதற்கு சஜித்தும் இணங்கிவிட்டார் என்றும் பேச்சு.

கொஞ்சக் காலம் நாட்டின் வெளிவிவகார அமைச்சராகச் செயற்பட்டு ஐ.நாவின் பல்வேறு மட்டங்களுடன் அடிபட்டதால் மங்களவுக்கு பிறந்த ஆசை இது. வெளிவிவகார அமைச்சராக இருந்த போதும், இப்போதும் தாம் பிரதிபலிக்கும் அமெரிக்க சார்புப் போக்குத் தமக்கு இலகுவாக ஐ.நா. பொதுச் செயலர் பதவியைப் பெற்றுத் தரும் என்றும் நம்புகின்றார் மங்களத்தார்" – என்றார் அவர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது இதைத்தானா? சு.க. பக்கத்திலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் முரண்டு பிடித்துக் கொண்டு, வேறு வழியின்றி ஐ.தே.க. பக்கம் வந்த தமக்கு, முக்கியத்துவம் கொடுத்துக் கட்சியில் தம்மைத் தூக்கி விட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முதுகில் மங்கள சமரவீர குத்த முயன்றபோதே இப்படி ஏதும் பின்னணி இருக்கும் என்று சந்தேகித்தேன். அது சரிதான் போலும்...!

- மின்னல் -

### உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது: –

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையின் இந்தக் கோரிக்கையை, நாம் ஆட்சிப்பீடத்துக்கு வந்தவுடன் நிறைவேற்றவுள்ளோம்.

அதுமாத்திரமன்றி, இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் பயங்கரவாதம் மற்றும் இனவாதம் இன்றியும், நாட்டுக்குள் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றியும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை எமது ஆட்சியில் பெற்றுக்கொடுப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையை அடுத்து, கொழும்பு பேராயருக்கு ஏற்பட்டுள்ள சிரம நிலைமையை நான் புரிந்துகொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமன்றி, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்காகவுமே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை இந்தக் கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளார்.

இவ்வாறான ஒரு சம்பவம் இனிவரும் காலங்களிலும் இடம்பெறாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

நாட்டில் நிலைகொண்டிருந்த 30 வருடப் போரை, மூன்று வருடங்களில் நிறைவு செய்த எனக்கு, இந்த விடயத்தை சிறந்த முறையில் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்தநிலையில், கொழும்பு பேராயரினால் அரசிடம் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை நியாயமானதாகும் – என்றுள்ளது. (ஐ)

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய இராணுவத் தளபதி நியமனத்திற்கு, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகப் பெரும் எதிர்ப்பலைகள் எழுந்துள்ளன. இந்த நிலையிலேயே அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோது, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய இராணுவத் தளபதி நியமனம் தொடர்பாக நாம் திருப்தியடைகின்றோம். அவர்தான் இதற்குத் தகுதியான ஒருவராக தற்போதைய நிலைமையில் காணப்படுகிறார். ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். இதனைக் கேள்விக்குட்படுத்தும் அதிகாரம் எவருக்கும் கிடையாது – என்றார். (ஐ)

### அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணமாகவுள்ளது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த போது, பல விடயங்கள் குறித்து அவருடன் பேசினோம். எங்களைப் புதுடில்லிக்கு வரும்படி அவர் கேட்டிருந்தார். அடுத்து வரும் வாரங்களில் அந்தப் பயணத்தை மேற்கொள்வோம் என நம்புகின்றோம்.

தேசியப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு அளித்த உறுதிப்பாட்டை பேணுவதை உறுதி செய்வதில் இந்தியா இன்னும் தீவிரமான பங்கை வகிக்குமாறு புதுடில்லியிடம் வலியுறுத்துவோம்.

தேசியப் பிரச்சினைக்கு இலங்கை இன்னும் தீர்வை வழங்கவில்லை என்ற உண்மை குறித்து நாங்கள் புதுடில்லியுடன் கலந்துரையாடுவோம்.

இந்த விடயம் தொடர்பான தீர்மானத்தை ஆதரித்த இந்தியாவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் – பேச்சுகளுக்கு உதவிய நாடுகளுக்கும் இலங்கை அரசால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இப்போதைய சூழலில், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் உணர வைக்க வேண்டியது அவசியம் –என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், கூட்டமைப்பு புதுடில்லி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு கடந்த 12ஆம் திகதி சென்றிருந்தார். அவர் அங்கு ஒரு வாரம் தங்கியிருந்தார். அவர் தனது மருத்துவத் தேவைக்காகவே இந்தியாவுக்குச் சென்றிருந்தார் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. (ஐ)

# பஸில் தலைமையில் நாளை சு.கவுடன் பேசத் தீர்மானம்!

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்கு இடையில் நாளை பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்கு இடையில் நாளை பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு கட்சிகளும் இணைந்து எதிர்வரும் தேர்தல்களை முன்னிட்டு கூட்டணி அமைப்பது தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் வகையில் இந்தப் பேச்சு அமையும் என, எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்கு இடையில் பல்வேறு கட்டங்களாக பேச்சு இடம்பெற்றிருந்தது. எனினும், கூட்டணி தொடர்பான இறுதி முடிவு எட்டப்பட்டிருக்கவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்ப்பில், பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர எம்.பி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான லசந்த அழகியவன்ன ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக அறியமுடிகின்றது. (ஐ)

# முருங்கன் விபத்தில் 2 இளைஞர்கள் பலி!

மன்னார், ஓக. 26

மன்னார் – முருங்கன் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். அளவக்கையில் இருந்து முருங்கன் நோக்கிச் சென்றபோது வேக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இந்த இரண்டு இளைஞர்களும் சம்பவ இடத்தில் பலியாகினர்.

இதன்போது அளவக்கை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இராசதுரை பிரசாந்த் (வயது 24) , கணேஸ் தயாளன்(வயது19) ஆகிய இரண்டு இளைஞர்களே விபத்தில் பலியாகியுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடல் கூறு பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ஓட்டோ தீப்பிடித்தது!



கொழும்பு, ஓக. 26

அம்பாந்தோட்டை அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக நெடுஞ்சாலை இன்னும் திறக்கப்படவில்லை. அதிவேக நெடுஞ்சாலையில் ஓட்டோக்கள் பயணிக்க அனுமதிக்கப்படுவதில்லை. எனினும், சட்டவிரோதமாக நுழைந்த ஓட்டோ தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தீப்பிடித்து எரிந்தது.

இதனால் நெடுஞ்சாலையின் ஒரு பகுதியும் பாதிக்கப்பட்டது.

### மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் சவேந்திர சில்வாவின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. இறுதிப் போரை களத்தில் நின்று வழிநடத்தியவர் அவர். முள்ளிவாய்க்கால் வரையில் விடுதலைப்புலிகளுடன் முட்டி மோதிப் போரிட்டவர். அப்படிப்பட்ட ஒருவர் மீது விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் சர்வதேச அமைப்புக்கள் வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றன.

சவேந்திர சில்வா இராணுவத் தளபதி பதவிக்கு முழுத் தகுதியுடையவர். அவருக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புவதை அனைத்துத் தரப்புக்களும் உடனே நிறுத்த வேண்டும். ஒருவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினால் அவர் குற்றவாளி என்று அர்த்தமில்லை. சவேந்திர சில்வா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் எதுவும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

போர்க் களத்தில் வல்லமை பொருந்திய தளபதியாகச் செயற்பட்ட சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாகப் பதவி வகிப்பதற்கு சகல தகுதியும் உடையவர். அவரை அந்தப் பதவிக்கு நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார். (ஐ)

# சிறுபான்மை மக்களின் விடயத்தில் தற்போதைய அரசு அதிக அக்கறை

## இந்தியாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

**சென்னை, ஓக. 26**
**கடந்தகால அரசை விட, ஆட்சிக்கு வந்துள்ள எங்களது அரசே சிறுபான்மை மக்களின் விடயத்தில் அதிக அக்கறை காட்டுகிறது. சிறுபான்மை மக்களுக்கு எவ்வளவு தூரம் உரிமைகளையும் சலுகைகளையும் வழங்க முடியுமோ அவ்வளவு தூரம் வழங்குவதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

தனிப்பட்ட விடயமாக இந்தியா சென்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலினை சிநேகபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தயாநிதிமாறன், ஆலந்தூர் பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

எனது தனிப்பட்ட விடயமாகவும், நல்லிணக்க விடயமாகவும் மு.க. ஸ்டாலினை சந்தித்தேன். இலங்கையின் அரசியல் களம் மற்றும் இந்திய, தமிழக விவகாரங்கள் குறித்து எங்களுக்குள் கருத்துகளை பகிர்ந்து கொண்டோம். முக்கியமான அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தவுள்ள ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் தற்போதைய அரசியல் போக்கு குறித்தும் எங்களுக்குள் பேசிக்கொண்டோம்.

2015ஆம் ஆண்டு எங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்தது முதல் இன்றுவரை இலங்கை சிறுபான்மைச் சமூகத்தின் விடயத்தில் எவ்வளவு தூரம் உரிமைகளைக் கொடுக்க முடியுமோ அதற்கான முயற்சிகள் நடக்கின்றன. பல விடயங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தாலும், முன்னைய அரசு கொடுத்த நெருக்கடிகள் தற்போது நீங்கியுள்ளன.

அபகரிக்கப்பட்ட உரிமைகளை மீட்டுக் கொடுத்தல், புதிய சட்டவாக்கங்கள், அதிலே சிறுபான்மை சமூகங்களுக்கு அநியாயங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வது போன்ற விடயங்களில் எங்கள் அரசு



உரிய கவனம் செலுத்தியுள்ளது. கடந்த அரசோடு ஒப்பிடுகையில் தற்போதைய அரசு சிறுபான்மை மக்களுக்கு இயன்ற சில விடயங்களை செய்துள்ளது. இன்று முற்றுப்பெறாமல் இருக்கும் சர்ச்சைகள், விமர்சனங்கள் இல்லாமலும் இல்லை.

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த பின்னணியில் அவசரகாலச் சட்டம் அவசியமாக தேவைப்பட்டது. விசாரணையை துரிதப்படுத்துவதற்கும், குற்றவாளிகளை இனம்காண்பதற்கும் சந்தேகநபர்களை கண்டுபிடிப்பதற்கும் அவசரகாலச் சட்டத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது பயங்கரவாதத் தடை குறித்த விடயங்களிலும் அவசரகாலச் சட்டம் தேவையற்றது என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

தனிமனித சுதந்திரம், மனித உரிமைகள் விவகாரம் போன்ற விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதேநேரம் அவசரகாலச் சட்டம்நீடித்தால் இலங்கைக்குவருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இப்படியான விடயங்களை கருத்திற்கொண்டுதான் தேவைக்கதிகமாக அவசரகாலச் சட்டத்தை நீடிக்காமல் அதனை வாபஸ் பெற்றுள்ளோம்–என்றார்.

முன்னதாக சென்னை மண்ணடியில் அமைந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் அலுவலகத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு தலைமை நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பளித்தார்கள். இதில் மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில செயலாளர்கள் நிஜாம்தீன், காயல் மகபூப், மாவட்ட தலைவர் ஜெய்லாபுதீன், ரவண சமுத்திரம் தமீம் அன்சாரி, ஊடகவியலாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கல்வித்துறை அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரம் கல்விச் செயலருக்கு!

## தாமதத்தைத் தடுப்பதற்கு வழி

கொழும்பு, ஓக. 26

இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் கல்வி சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவை ஆகிய மூன்று அதிகாரிகளுக்கு ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கான அனுமதியளிக்கும் அதிகாரத்தை அரச சேவை ஆணைக்குழு, கல்வி அமைச்சின் செயலாளருக்கு நிபந்தனையுடன் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

அனைத்து கடித ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் ஓய்வூதிய கடித ஆவணங்களும் அனுமதி வழங்கும்போது இடம்பெறும் சிரமங்கள் காரணமாக சில அதிகாரிகளுக்கு பல மாதங்கள் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுவதாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாகக் கல்வி அமைச்சர் சட்டத்தரணி அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைவாக அமைச்சின் அரச சேவை ஆணைக்குழு வினால் விடுக்கப்பட் கோரிக்கைக்கு அமைவாக இந்த அதிகாரம் மாற்றப்பட்டுள்ளது.

ஒழுக்கத்தை மதிக்கும் மற்றும் வேறு பிரச்சினைகளுடன் கூடிய அதிகாரிகள் தவிர்ந்த பொதுவான நடைமுறைகளின் கீழ் உரிய தினத்தில் ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கோரியுள்ள அதிகாரிகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதற்கு அமைச்சுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

ஓய்வூதியம் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ள அதிகாரிகள் 6 மாதத்திற்கு முன்னதாக தமது முழுமைப்படுத்திய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்த 3 சேவைகளிலும் உள்ள சுமார் 22 ஆயிரம் அதிகாரிகளுக்கு இதற்கு அமைவாக குறிப்பிட்ட தினத்தில் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஓய்வூதியத்தை பெறுவதற்கு எதிர்பார்த்துள்ள தேசிய பாடசாலை ஆசிரியர்களும், மாகாண பாடசாலை ஆசிரியர்களும் தமது ஓய்வூதியத்துக்காக விண்ணப்பத்தை மாகாண கல்வி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை 6 மாத காலத்திற்கு முன்னர் அந்த அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் தாமதம் இன்றி உரிய தினத்தில் ஓய்வூதிய சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்– என்றுள்ளது. (ஐ)







# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## நன்றிக் கடனுக்கு கடைசி வாய்ப்பு

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நியாயமான கோரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண முதலமைச்சருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். கடந்த 19 ஆம் திகதி தாம் எழுதிய கடிதம் ஒன்றில் இந்த விடயத்தை அவர் விவரித்திருக்கின்றார்.**

**2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு தமிழ் மக்கள் எவ்வளவு கூட்டுணர்வோடு ஒன்றுபட்டுச் செயற்பட்டார்கள் என்பதையும், தமிழர்களின் வாக்குகளினால்தான் மைத்திரிபால சிறிசேன இந்தப் பதவி நிலையை எட்ட முடிந்தது என்பதையும் அந்தக் கடிதத்தில் விவரித்திருக்கின்றார் முன்னாள் முதல்வர்.**

**ஆனால் , அந்தத் தமிழ் மக்களுக்குத் தனது பிரதியுபகாரமாகச் செய்ய வேண்டிய எதனையுமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்யவே இல்லை என்பதையும் பெரும் விசனத்தோடு விலாவாரியாகச் சுட்டிக்காட்டியுமிருக் கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.**

**அவர் குறிப்பிட்டமை போல மீண்டும் ஒரு பதவிக் காலத்துக்கு அந்தக் கதிரையில் அமர்வதற்கான மைத்திரிபால சிறிசேனவின் முயற்சி அருகிவிட்டது என்பதே யதார்த்தம்.**

**இந்த நிஜ நிலைமையை – கசப்பான உண்மையை – மைத்திரிபால சிறிசேனவும் புரிந்து கொண்டமை மட்டுமன்றி, வேறுவழி ஏதுமின்றி அந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துக்கும் அவர் தயாராகியே வருகின்றார் என்பதும் புலப்படுகின்றது.**

**இந்தச் சமயத்தில், தமிழர்கள் விவகாரம் தொடர்பில் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் கூறும் ஆலோசனையை அவர் ஏற்பாராயின் – ஏற்று உரிய பிரதிபலிப்பைக் காட்டி, சரியானதைச் செய்வாராயின் – நன்றியுடைய ஒருவராக அவரைத் தமிழினம் கருதும்.**

**யுத்தத்தினாலும், அதையொட்டிய இக்கட்டுக்களினாலும் பேரழிவைச் சந்தித்திருக்கும் தமிழினத்தின் உடனடி, நெருக்கடிப் பிரச்சினைகளை, ஜனாதிபதிக்கு எழுதிய தமது பிந்திய கடிதத்தில் விலாவாரியாக விவரித்துள்ள நீதியரசர் விக்னேஸ்வரன், நீங்கள் பதவியை விட்டு விலகிச் செல்ல முன்னர், உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு உரிய நன்றிக் கடனைத் தீர்ப்பதற்காக இன்ன, இன்ன விடயங்களையாவது செய்து விட்டுச் செல்லுங்கள் என்று மன்றாட்டமாகக் கோரியிருக்கின்றார்.**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற மிக மோசமான சட்டமுறைமையின் கீழ், முறையற்ற விதத்தில் தண்டிக்கப்பட்டும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டும் பெரும் கொடூரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நமது தமிழ் அரசியல் கைதிகளை நிரந்தரமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் நீதி செய்யுங்கள் என்று கோரியிருக்கின்றார் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன்.**

***“நீங்கள் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதால், அரசியல் கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தில் அரசியல் காரணங்கள் உங்கள் கைகளைக் கட்டிப் போடமாட்டா. 2015 ஜனவரி மாதத்தில் நீங்கள் பதவி ஏற்பதற்கு தமிழ் மக்கள் கொடுத்த அமோக ஆதரவின் அடிப்படையில் அதற்குப் பிரதியுபகாரமாக இந்த நற்கைங்கரியத்தைச் செய்வீர்கள் என நம்புகின்றேன்.”*** **– என்று மனதைத் தொடும் விதத்தில் தமது கோரிக்கையை எழுத்தில் முன்வைத்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.**

***“உங்கள் பதவிக் காலத்தின்போது நான் உங்களுக்கு எழுதும் கடைசிக் கடிதமாக இது இருக்கலாம்.”*** **– என்ற பீடிகையோடு ஆரம்பித்துத் தாம் எழுதிய நீண்ட கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர்.**

**நீதியரசர் விக்னேஸ்வரன் குறிப்பிடுகின்றமை போல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் பத்துப் பதினொரு வாரங்கள்தான் உள்ளன.**

**பெருவாரியாகத் திரண்டு வாக்களித்துத் தம்மைப் பதவியில் அமர்த்திய தமிழர்களுக்கு ஏதேனும் நீதி, நியாயம், நிவாரணம் அவர் செய்ய வேண்டும் என்று கருதினால், அதற்கான கடைசி வாய்ப்பு இதுதான்.**

**தமிழர்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல்போனோர் பிரச்சினை போன்ற தமிழ் மக்களின் பற்றி எரிகின்ற பிரச்சினைகளுக்குத் தன்னால் இயன்ற நீதியைச் செய்வதற்கு அவருக்குக் கிட்டியுள்ள கடைசி வாய்ப்பு –சந்தர்ப்பம் – இது.**

**அவர் எப்படிச் செயற்படப் போகின்றார் என்பது நாளை மறுதினம் கொழும்பில் அவர் கூட்டியுள்ள கூட்டத்தில் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கலாம். நன்றிக் கடன் நிறைவேற்றுபவராகச் செயற்படுவாரா மைத்திரி?**

# பண்டாரவன்னியன் நினைவு நிகழ்வை புறக்கணித்து வெளியேறிய சாந்தி எம்.பி.

## அது கட்சி நிகழ்வா எனவும் விசனம்

வவுனியா, ஓக. 26

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 216 ஆவது நினைவு தின நிகழ்வில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா வெளிநடப்புச் செய்ததுடன் இது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி நிகழ்வா எனவும் விசனம் வெளியிட்டார்.



வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நேற்றுக் காலையில் பண்டாரவன்னியனின் நினைவுச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து நகரசபை மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பண்டார வன்னியனின் கொடியை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றபோது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் உரையாற்றினார்.

நீண்டநேரமாக விருந்தினர் வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா அமர்ந்திருந்தபோதும் அவருக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர் செந்தில்ரூபனை அழைத்து தனக்கு உரையாற்ற 5 நிமிடம் வழங்குமாறு சாந்தி சிறிஸ்கந்தராஜா கோரியிருந்தார்.

அவர் நகரசபைத் தலைவர் இ.கௌதமனிடம் கோரியபோதும் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனை அந்த உறுப்பினர் எம்.பியிடம் தெரிவித்ததையடுத்து, இது பண்டாரவன்னியன் நிகழ்வா? அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி நிகழ்வா எனக் கேள்வி எழுப்பியபடி மண்டபத்தில் இருந்து வெளியேறினார்.

இதன் பின் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்–

இந்த நிகழ்வு மிகவும் மதிக்கக் கூடிய ஒரு நிகழ்வு. பண்டார வன்னியனின் 216 ஆவது இந்த நிகழ்வை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடியதையிட்டு மகிழ்வடைகின்றேன். நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால் நான் ஒரு வன்னியாள். அந்த வன்னி மண்ணைச் சேர்ந்தவள். அந்த மண்ணில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவள் என்ற உணர்வுடன் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தேன்.

ஆனாலும் பண்டாரவன்னியனின் சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் நகரசபையில் இடம்பெற்ற நிகழ்வு ஒரு கட்சி சார்ந்த நிகழ்வாகப் போய்விட்டதோ என்ற வேதனையை நான் உணர்கின்றேன். இந்த நிகழ்வில் சக நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த அதே வேளை, நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் எனக்கும் எனது கருத்தை சொல்வதற்கான கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் வன்னி மண்ணைக் காத்த வீரன் பண்டாபரவன்னியன் நிகழ்வு ஒரு கட்சி சார்ந்த நிகழ்வாக மாறிவிட்டதோ என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. காட்டிக் கொடுப்புக்களால் தான் அன்று பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டான். எங்களுடைய ஆயுதப் போராட்டம் காட்டிக் கொடுப்பால் தான் தோற்கடிக்கப்பட்டது. இன்று நடந்த வரவேற்பு நிகழ்வு சிங்கள தேசத்திற்கு நாம் தமிழ், சிங்களம் என்ற ஒற்றுமையுடன் வாழத் தயார் என்ற ஒரு செய்தியைச் சொல்கிறது. ஒரே நாட்டிற் குள் எங்களுக்குரிய சுதந்திரத்துடன் நாங்கள் ஒற்றுமையாக வாழத் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் அதைத் தர சிங்களதேசம் தயாராக வில்லை என்பதை அந்த நிகழ்வு சொல்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலையை உருவாக்க சம்பந்தன் ஐயா தலைமையில் முயன்று கொண்டிருக்கையில் காட்டிக் கொடுப்புக்களால் தோற்கடிக்கப்படுகின்றோம். மீண்டும் காட்டிக் கொடுப்புக்களால் எங்களது பிரச்சினை நீண்டு செல்கின்றது என்ற வேதனையையும் கூற விரும்புகின்றேன்–என்றார். (ஐ–100)

# ஐ.நா. அமைதிப்படையிலிருந்து விலக்கப்படுகின்றதா இலங்கை?

## சமரச முயற்சிக்கு அரச தரப்பு தீவிர முயற்சி

இராணுவத் தளபதியாக லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமித்ததன் மூலம், ஐ.நா. அமைதி காக்கும் படையணியில் தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பை இலங்கை இழந்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லெபனான், மாலி மற்றும் தெற்கு சூடானில் தற்போது சுமார் 415 இலங்கை இராணுவத்தினர் அமைதி காக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குச் சிறப்பு சம்பளமும் கிடைக்கிறது.

இராணுவத் தளபதியாக லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமித்ததை தொடர்ந்து அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன அதிருப்தி தெரிவித்திருந்தன. இவற்றில் சில நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.



இதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், இராஜதந்திர முயற்சிகளின் மூலம் இந்த விவகாரத்தைச் சமரசம் செய்ய முயன்று வருகின்றனர். இராணுவத் தளபதியை நியமித்தது ஜனாதிபதியின் முடிவு, இது அரசுடன் தொடர்புபட்டல்ல என இராஜதந்திர வட்டாரங்களைச் சமரசப்படுத்த அரசு தரப்பில் முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தடுத்த வாரங்களில், இலங்கையின் ஐ.நா. அமைதி காக்கும் பணி குறித்து சர்வதேச சமூகம் தெளிவான முடிவை எடுக்குமென தெரிகிறது. (ஐ)

**நாளை**

நட்சத்திரம்: புநர்பூசம்
மு.இ. 10.58 வரை
திதி : துவாதசி மு.இ. 11.28 வரை

**27.08.2019**
**செவ்வாய்க்கிழமை**

இராகுகாலம் : 3.05 – 4.35
சுப நேரம் : 10.35 – 12.05





# பண்டாரவன்னியனின் நினைவு வவுனியாவில்

வவுனியா, ஓக. 26

வன்னி மண்ணின் விடுதலைக்காகப் போராடிய இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 216 ஆவது வெற்றி விழாவும், நினைவுதின அனுஷ்டிப்பும் நேற்று நடைபெற்றது.

வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தலைமையில் மாவட்ட செயலகம் முன்பாகவுள்ள பண்டாரவன்னியனின் சிலைக்கு முன்னால் இந்த நிகழ்வு இடம்பெற்றன.

இதன்போது பண்டாரவன்னியனின் சிலைக்கு மாலை அணிவித்தும் மலரஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டதுடன், பண்டாரவன்னியனின் வரலாறு தொடர்பிலும் கருத்துரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வவுனியா நகரசபை உறுப்பினர்கள், வவுனியா வடக்குப் பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள், செட்டிகுளம்



பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஜனாதிபதி சட்டத்தரணியும் பண்டாரவன்னியனின் சிலை நிறுவியவருமான மு.சிற்றம்பலம், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ - 100)

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாயத் தேவை!

## வடமாகாணக் கடற்றொழிலாளர் சம்மேளனம் ஆதரவு

**யாழ்ப்பாணம், ஓக. 26 தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெற இருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாயத் தேவை. இதற்கு அனைத்து தமிழ் மக்களும் தமது பரிபூரணமான ஒத்துழைப்பை வழுங்கவேண்டுமென வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் கோரியுள்ளார்.**

எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தொடர்பில் வடக்கு- கிழக்கு பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் தமிழ் மக்கள் பேரவை கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைமை அலுவலகத்தில் வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளன நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு 122 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் படையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு தங்களது ஆதரவை வழங்குவதாகவும் இதற்கு அனைத்துத் தமிழ் மக்களும் தமது பரிபூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். என்றார்.



10 சமாசங்களை உள்ளடக்கிய வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் சார்பில் பூரண ஆதரவை வழங்குவதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழர்கள் அரசியல் பலம்பெற்றவர்களாக மாறும்போதுதான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணமுடியும் என்ற அடிப்

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவை இணைத்தலைவர்களில் ஒருவரான முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் பேரவை பிரதிநிதிகள், எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் பொருளாளர் செ.சிவஞானராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் பிரமாண்டமாக நடந்தது திருக்குறள் பெருவிழா



வவுனியா, ஓக. 26

வவுனியாவில் திருக்குறள் பெரு விழா நேற்று முன்தினம் குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஜனாதிபதியின் எண்ணக் கருவில் வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கல்வி அமைச்சும் ஏற்பாடு செய்த திருக்குறள் விழா வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ. எம். ஹனீபா தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் உள்ள திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டதுடன், அங்கிருந்து அதிதிகள் குடியிருப்பு கலாசார மண்டபம் வரை மேள தாளங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

குடியிருப்பு கலாசார மண்டப முன்றிலில் புனரமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன், கலாசார மண்டபத்தில் திருவள்ளுவரின் சிலை வைக்கப்பட்டு நினைவு கூரப்பட்டது.

அத்துடன், நிகழ்வில் வவுனியா மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் வரவேற்புரையை





நிகழ்த்தியதுடன் வவுனியா கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி கு. சிதம்பரநாதன் தொடக்கவுரையை நிகழ்த்தியிருந்தார்.

இதனையடுத்து தமிழ்மணி அகளங்கன் இணைத் தலைமையுரையையும், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரா சிறப்புரையையும் நிகழ்த்தியிருந்தனர்.

கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன் நிகழ்விற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் திருவள்ளுவரின் புகைப்படமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 100)



# நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.26

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல் லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில்–

இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **இசைக்கச்சேரி** பாட்டு – கல்யாண் சரண் வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் – ஞா.வசந், கெஞ்சிரா – ச.ஜெனில்சங்கர்.

7.15 முதல் 8.15 வரை **இசைக்கச்சேரி** பாட்டு – சுகன்யா அரவிந்தன், வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் – ஞா.வசந்.

## கஷ்மீர் விவகாரம் குறித்து
# ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு பாகிஸ்தான் மீண்டும் எழுத்தில் புகார்

இஸ்லாமாபாத்,ஒக.26

காஷ்மீர் விவகாரம் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு பாகிஸ்தான் மீண்டும் கடிதம் எழுதியுள்ளது.

காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது குறித்து சர்வதேச சமுதாயமும், ஐ.நா.வும் இந்தியாவின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் பற்றி கேள்வி எழுப்ப வேண்டும் என்று பாகிஸ்தான் கோரிக்கை விடுத்தது.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி குரேஷி ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு கடந்த 4 ஆம் திகதி கடிதம் எழுதியமையுடன், 8 ஆம் திகதி தொலைபேசியிலும் பேசினார்.

இந்நிலையில் மீண்டும் குரேஷி ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிஷேல் பாச்லெட்டுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், இந்தியாவின் நடவடிக்கைகள் ஐ.நா.வின் தனியுரிமை, பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம், சர்வதேச சட்டம் மற்றும் இந்தியாவின் சொந்த வாக்குறுதிகளையும் அப்பட்டமாக மீறுவனவாகும் என்று கூறியுள்ளார்.

(உ)

# காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா நெருப்புடன் விளையாடுகின்றது
## பாகிஸ்தான் அதிபர் எச்சரிக்கின்றார்

இஸ்லாமாபாத்,ஒக.26

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட விவகாரத்தில் இந்தியா நெருப்புடன் விளையாடுகிறது என பாகிஸ்தான் அதிபர் பேட்டியில் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி, வைஸ் நியூஸ் என்ற கனடா-அமெரிக்க ஊடகம் ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில், காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து பிரிவுகளை அரசமைப்பில் இருந்து நீக்கி விட்டதனால் அங்கு நிலைமை மேம்படும் என்று இந்தியா நினைத்தால், இந்திய அரசாங்கம் முட்டாள்களின் சொர்க்கத்தில் வசித்து வருகிறது என்று அர்த்தம்.

இந்த விவகாரத்தில் அரசமைப்பு மாற்றங்களை மேற்கொண்டு இந்தியா உண்மையில் தீவிரவாதத்தினை ஊக்குவித்துள்ளது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட விவகாரத்தில் இந்தியா நெருப்புடன் விளையாடி வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

நீண்ட காலத்திற்கு பின் இந்த விவகாரம் சர்வதேச அளவிற்கு சென்றுள்ளது எனக் கூறிய அவர், பாதுகாப்பு கவுன்சிலின் எண்ணற்ற தீர்மானங்களை இந்தியா தவிர்த்து விட்டது.



இந்த விவகாரம் சுமுக முறையில் தீர்க்கப்பட பாகிஸ்தானுடன் அமர்ந்து பேசுவதற்கும் இந்தியா மறுத்து விட்டது என்றும் கூறினார்.

பாகிஸ்தானுக்கு எதிராக புல்வாமா போன்ற தாக்குதல்களை இந்தியா நடத்த கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால் போரைத் தொடங்க பாகிஸ்தான் விரும்பவில்லை. இந்தியா போரை தொடங்கினால், எங்களை தற்காத்து கொள்வதென்பது எங்களது உரிமை என்றும் கூறியுள்ளார்.

# நுளம்பு மருந்து தெளிக்கும் பணியில் மனிதர்களுக்கு பதிலாக ட்ரோன்!
## ஐதராபாத்தில் நடவடிக்கை

ஐதராபாத்தில் உள்ள அனைத்து ஏரிகளிலும் ட்ரோன் மூலம் நுளம்பு மற்றும் குடம்பிகளை ஒழிக்க மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

ஐதராபாத்தின் மியாப்பூரில் உள்ள குருநாதம் ஏரியில் ட்ரோனை பயன்படுத்தி நடந்த நுளம்பு ஒழிப்பு முயற்சி வெற்றியடைந்ததை அடுத்து மற்ற ஏரிகளுக்கும் இதை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதன்முறையாக நுளம்பு மருந்து அடிக்கும் முயற்சியில் ட்ரோன் பயன்படுத்தப்பட்டு, நல்ல பலன் கிடைத்தது. கடந்த வெள்ளிக்கிழமை 2 ஆவது முறையாக நடந்த சோதனையும் வெற்றியடைந்துள்ளது.

இதன் மூலம் 2 நாள்களில், 40 மில்லி லீற்றர் தண்ணீரில் லாா்வாக்கள் எனப்படும் குடம்பிகளின் அடர்த்தி 41 இல் இருந்து 28 ஆகவும் நுளம்புகளின் எண்ணிக்கை 26இல் இருந்து 16 ஆகவும் குறைந்துள்ளது. நுளம்பு மருந்து தெளிக்கும் பணியில் நேரடியாக மனிதர்கள் ஈடுபடுத்தப்படுகின்றமையைத் தடுக்கும் பொருட்டும் இந்த ட்ரோன் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 8 முதல் 9 லீற்றர் வரை மட்டுமே ரசாயனங்களை எடுத்துச்சென்ற ட்ரோனில் தற்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டு 16 முதல் 17 லீற்றர் வரை தெளிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.



# காஷ்மீர் சென்ற ராகுல் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டார்கள்

ஸ்ரீநகர், ஒக.26

காஷ்மீரில் நிலைமையை நேரில் பார்வையிடவும், மக்களை சந்திக்கவும் ராகுல் காந்தி தலைமையில் விமானத்தில் சென்ற எதிர்க்கட்சி தலைவர்கள் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். வெளியில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு அவர்கள் டெல்லிக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370ஆவது சட்டப்பிரிவை ரத்து செய்தும், மாநிலத்தை இரு யூனியன் பிரதேசங்களாக பிரித்தும் மத்திய அரசு கடந்த 5 ஆம் திகதி அறிவித்தது.

இதன் காரணமாக காஷ்மீர் மாநிலம் முழுவதும் அசாதாரண சூழ்நிலை நிலவியது. தகவல் தொடர்பு, தொலை தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டன. பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன. மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

காஷ்மீரை சேர்ந்த தேசிய மாநாடு கட்சி நிறுவுநர் பரூக் அப்துல்லா, தலைவர் உமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெகபூபா முப்தி ஆகிய 3 முன்னாள் முதலமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டுள்ள தலைவர்களை விடுவிக்க வேண்டும் என்றும், கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகளும், காஷ்மீரில் உள்ள பல்வேறு அமைப்புகளும் போராட்டம் நடத்திவருகின்றன. அங்கு ஓரளவு இயல்பு நிலை திரும்பி வந்ததால், மத்திய அரசு காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பிவிட்டதாக அறிவித்தது.

அதேநேரம் மத்திய அரசின் அறிவிப்பைக் கண்டித்து பல்வேறு அமைப்புகள் நடத்திவரும் போராட்டங்கள் காரணமாக மீண்டும் காஷ்மீரில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. கட்டுப்பாடுகளும் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன.



காஷ்மீரில் உள்ள நிலைமையை நேரில் பார்வையிடவும், அங்குள்ள மக்களை சந்திக்கவும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கு செல்கிறார்கள் என அறிவித்தனர்.

இதை அறிந்ததும் மாநில செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை இயக்குநரகம், எதிர்க்கட்சி தலைவர்கள் காஷ்மீர் வருகையை தள்ளிவைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இன்னும் சில பகுதிகளில் கட்டுப்பாடுகள் தொடர்வதால் எதிர்க்கட்சிகளின் வருகை இயல்பு நிலை திரும்புவதற்காக அரசு எடுத்துவரும் முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் மாநில அரசு தெரிவித்தது.

ஆனாலும் திட்டமிட்டபடி காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மதியம் டில்லியில் இருந்து விமானம் மூலம் காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகருக்குப் புறப்பட்டனர்.

காங்கிரஸ் சார்பில் ராகுல் காந்தி, குலாம்நபி ஆசாத், ஆனந்த் சர்மா, கே.சி.வேணுகோபால், லோக்தந்திரிக் ஜனதாதள தலைவர் சரத் யாதவ், இந்தியகம்யூனிஸ்டுகட்சி பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, தி.மு.கவின் எம்.பி. திருச்சி சிவா, தேசிய மாநாட்டு கட்சி மஜீத் மேமன், திரிணாமுல் காங்கிரஸ் தினேஷ் திரிவேதி, ராஷ்டிரீய ஜனதாதளம் மனோஜ் ஜா ஆகிய 8 கட்சி பிரதிநிதிகள் 11 பேர் இந்தக் குழுவில் புறப்பட்டுச் சென்றனர்.

ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்தில் அவர்கள் சென்று இறங்கியதும் அதிகாரிகள் அவர்களை விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தினர். விமான நிலையத்தில் இருந்து அவர்கள் வெளியே செல்லவும், நகருக்குள் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி தலைவர்களை பத்திரிகையாளர்கள் சந்திக்கவும் பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

சில மணி நேரம் விமான நிலையத்திலேயே தங்கவைக்கப்பட்ட அவர்கள், பின்னர் மாலையில் டெல்லிக்கு விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

முன்னதாக டெல்லி விமான நிலையத்தில் குலாம்நபி ஆசாத் நிருபர்களிடம் கூறும்போது, ஜம்முவில் பல கல்லூரிகள், பள்ளிகள் 5 ஆம் திகதியில் இருந்தே மூடப்பட்டுள்ளன எனச் செய்திகள் வருகின்றன. அங்கு இயல்பு நிலை திரும்பி விட்டது என்றால், என்னை ஏன் என் சொந்த மாநிலத்தை பார்க்க அனுமதி மறுக்கிறார்கள்? என்றார்.

எதிர்க்கட்சி பிரதிநிதிகள் திருப்பி அனுப்பப்பட்டமைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. அந்த கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நன்கு தெரிந்த தலைவர்களையே காஷ்மீருக்குள் அனுமதிக்க மறுப்பது வாக்காளர்களை சந்திப்பது, அவர்களின் குறைகளை கேட்பது போன்ற அரசியல் கட்சிகளின் உரிமைகள் மீதான அப்பட்டமான தாக்குதல் என்று கூறியுள்ளது.

ஸ்ரீநகர் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மீது பொலிஸார் தவறாக நடந்துகொண்டனர் எனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முறைப்பாடு கூறியுள்ளது.

ஏற்கனவே குலாம்நபி ஆசாத் 2 முறையும், சீதாராம் யெச்சூரி ஒரு முறையும் காஷ்மீர் மாநிலத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ராகுல் காந்தி காஷ்மீர் நிலைமை மோசமாக இருப்பதாக கூறியதற்கு, அந்த மாநில ஆளுநர் சத்யபால் மாலிக் காஷ்மீருக்கு வந்து நேரில் நிலைமையைப் பார்த்துவிட்டு கருத்து தெரிவிக்க தயாரா என்று சவால் விட்டார். ராகுல் காந்தியும் அந்தச் சவாலை ஏற்று எதிர்க்கட்சி தலைவர்களுடன் வருவார் எனக் கூறியதும், அதனை ஆளுநர் ஏற்க மறுத்தார்.

(உ)

# ஒரே சமயத்தில் பல ஏவுகணைகளைச் செலுத்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது வடகொரியா!

சியோல்,ஒக.26

வடகொரிய தலைவர் கிம் முன்னிலையில் மிகப் பெரிய ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்பட்டது.



வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் சர்வதேச எதிர்ப்புகளை மீறி அணு ஆயுத ஏவுகணைப் பரிசோதனைகளை அடிக்கடி நடத்தி உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தி வருகின்றார். இதற்கு அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நெருக்கடியை சமாளிக்க வடகொரிய தலைவருடன் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முறைப்படி பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் முடிவில், அணு ஆயுதப் பரிசோதனை கைவிடப்படும் என வடகொரியா அறிவித்தது. எனினும் அந்த சமாதான முயற்சிகள் குழம்பின.

இந்நிலையில், மீண்டும் வடகொரியா அணு ஆயுத பரிசோதனையில் ஈடுபட்டு வருகிறது எனத் தென்கொரிய இராணுவம் உறுதிப்படுத்தி உள்ளது.

இதுபற்றி அந்நாடு வெளியிட்ட செய்தியொன்றில், வடகொரியா, தெற்கு ஹாம்கியோங்கில் உள்ள சொந்தோக் என்ற நகரில் இருந்து நேற்று முன்தினம் காலை 6.45 மற்றும் 7.02 மணியளவில் ஜப்பானின் கிழக்கு கடல் பகுதியில் குறுகிய தொலைவு சென்று இலக்கை அழிக்கும் இரண்டு ஏவுகணைகளை அனுப்பிப் பரிசோதனை செய்துள்ளது.

அவை இரண்டும் மேக் 6.5 என்ற வேகத்தில் 380 கி.மீற்றர் தொலைவுக்கு, 97 கி.மீற்றர் உயரத்தில் பறந்து சென்றன. எங்களுடைய இராணுவம், கூடுதலாக ஏவுகணைகள் ஏவப்படுகின்றனவா என்று நிலைமையை கண்காணித்து வருகிறது. தயார் நிலையிலும் உள்ளது என்று தெரிவித்து இருந்தது.


இது, கடந்த ஜூலை 25 ஆம் திகதியில் இருந்து வடகொரியா மேற்கொள்ளும் 7 ஆவது ஏவுகணை பரிசோதனை ஆகும். இதற்கு முன், ஜூலை 25, ஜூலை 31, ஒகஸ்ட் 2, ஒகஸ்ட் 6, ஒகஸ்ட் 10 மற்றும் ஒகஸ்ட் 16 ஆகிய நாள்களில் வடகொரியா ஏவுகணை பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தது.

இதனிடையே, வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் மேற்பார்வையின் கீழ், ஒரே நேரத்தில் பல ஏவுகணைகளை செலுத்தும் மிக பெரிய லோஞ்சரான 'சுப்பர் லார்ஜ் மல்டிபிள் றொக்கெட் லோஞ்சர்' பரிசோதனை நடத்தப்பட்டு உள்ளது.

இதுபற்றி கொரிய மத்திய செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்தியில், இந்த புதிய மேம்பட்ட சாதனம் ஒரு மிக பெரிய ஆயுதமாகத் திகழும் என கிம் கூறினார் என்றும், எதிரி நாட்டு படைகளால் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற இராணுவ அச்சுறுத்தல்கள் மற்றும் ஆதிக்க அழுத்தங்களை தயக்கமின்றி தடுக்கின்ற வகையில், ஆயுத மேம்பாட்டு நடவடிக்கைகளை தொடர வேண்டிய தேவை நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார் என்றும் தெரிவித்து உள்ளது.

## சர்வதேச விண்வெளி மையத்தில் ரோபோ இணைவதில் தாமதம்!

ரஷ்யாவின் றொக்கெட் மூலம் சோயுஸ் விண்கலத்தில் அனுப்பி வைக்கப்பட்ட மனித உருவிலான ரோபோ சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இணைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



கஜகஸ்தான் நாட்டில் உள்ள ரஷ்யாவின் றொக்கெட் ஏவுதளத்தில் இருந்து சோயுஸ் எம்.எஸ் – 14 என்ற ஆளில்லா விண்கலம் அனுப்பப்பட்டது. சோயுஸ் விண்கலத்துடன் ஃபெடார் என்ற மனித உருவ ரோபோவும் அனுப்பப்பட்டது. இந்த ரோபோ சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்களுக்கு அவசர காலங்களில் உதவும் வகையில் 10 நாகள் பயிற்சி மேற்கொள்ள இருக்கிறது.

1.8 மீற்றர் உயரமும் 160 கிலோ எடையும் கொண்ட இந்த ரோபோ மின் இணைப்புகளை சரிசெய்தல், தீயணைப்பான்களை பயன்படுத்துதல் போன்ற பணிகளை விரைவாகச் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சோயுஸ் விண்கலம் சென்றடைந்து இரண்டு நாள்களாகியும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சர்வதேச விண்வெளி மையத்தில் ரோபோ இணைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# ஹொங்கொங் மக்கள் போராட்டத்தில் வன்முறை பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு



ஹொங்கொங்,ஒக.26

ஹொங்கொங் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில், போராட்டக்காரர்கள், பொலிஸார் இடையே மோதல் ஏற்பட்டது. மேலும் அந்தச் சம்பவத்தில் தடியடி, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சும் நடத்தப்பட்டன.

ஹொங்கொங்கில் முக்கிய கிரிமினல் வழக்குகளில் சிக்கி கைதாகிறவர்களை சீனாவுக்கு அனுப்பி வைத்து அங்கு விசாரணையை சந்திக்க வைக்க ஹொங்கொங் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது.

இது தொடர்பான பிரேரணையை அங்குள்ள சட்ட சபையில் நிறைவேற்ற முடிவு செய்ததைத் தொடர்ந்து அங்கு போராட்டம் வெடித்தது. அதைத் தொடர்ந்து பிரேரணை கிடப்பில் போடப்பட்டது.

ஆனாலும் பிரேரணையை நிரந்தரமாகத் திரும்பப்பெற வேண்டும், நிர்வாக தலைவர் கேரி லாம் பதவி விலக வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஜனநாயக ஆர்வலர்கள் வார இறுதி நாள்களில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஞாயிறன்று அங்குள்ள குன்டோங் பகுதியை நோக்கி பல்லாயிரக்கணக்கில் போராட்டக்காரர்கள் திரண்டனர். அவர்கள் திடமான தொப்பிகள், கண்ணீர்ப்புகையை எதிர்கொள்ள ஏற்ற முக மூடிகளை அணிந்து இருந்தனர். அவர்களை அங்கு குவிக்கப்பட்டிருந்த கலவர தடுப்பு பொலிஸார் தடுத்தனர். இதில் இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது.

பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் கல் எறிந்தனர். போத்தல்களை வீசினர். தடுப்பு வேலிகளைத் தகர்த்தெறிந்தனர்.

பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தினர். மிளகுத்தூள் வீசினர். கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்தனர். இதனால் பதற்றமான சூழல் உருவானது.







## சீனாவிலிருந்து அமெ. நிறுவனங்களை விலகுமாறு உத்தரவு பிறபித்தார் டிரம்ப்

### வர்த்தக சர்ச்சை தொடருகின்றது

அமெரிக்க நிறுவனங்கள் சீனாவை விட்டு வெளியேற அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். சீனாவை விட்டு அமெரிக்க நிறுவனங்கள் வெளியேறுமாறு தாம் உத்தரவிடுவதற்கு 1977ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் தமக்கு முழு உரிமை உள்ளது எனவும் அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.



உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாத காரணத்தால், இரு நாடுகளும் பரஸ்பரம் வரி விதித்துப் பதிலடி கொடுத்து வருகின்றன.

அண்மையில், 90 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான சீனப் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதலாக 5 விழுக்காடு வரி விதித்தது. அதேபோல் 12 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான அமெரிக்கப் பொருள்களுக்கு சீனாவும் கூடுதல் வரி விதித்தது. இதையடுத்து, அமெரிக்க நாட்டு நிறுவனங்கள் சீனாவை விட்டு வெளியேறுமாறு அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டார். சீனாவில் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் சொந்த மண்ணிற்கே திரும்புமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்த உத்தரவு சர்ச்சையான நிலையில், இதுதொடர்பாக வெள்ளை மாளிகையில் அதிபர் டொனால்ட் டிரம்ப் விளக்கம் அளித்தார்.

1977ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சர்வதேச அவசர பொருளாதார அதிகாரங்கள் சட்டத்தில், இதுபோன்று உத்தரவுகளை பிறப்பிக்க அமெரிக்க அதிபருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்நாட்டின் சி.ஆர்.எஸ். சட்ட நிறுவனமும் தெளிவுபடுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை, பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் இது போன்ற உத்தரவு பிறப்பிக்க அமெரிக்க அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக சி.ஆர்.எஸ். சட்ட நிறுவனம் கூறுகிறது. 1979ஆம் ஆண்டில் தங்கள் நாட்டு தூதரக அதிகாரிகள் மற்றும் குடிமக்கள் 52 பேர் ஈரானில் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்ட போது, அந்நாட்டிற்கு சொந்தமாக அமெரிக்காவில் உள்ள சொத்துக்களை, அதிபர் ஜிம்மி கார்டர் முடக்கியமையையும் சி.ஆர்.எஸ். சட்ட நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

## பிரான்ஸ் பியரிட்ஸ் நகரில்

# ஜி7 உச்சி மாநாடு; இவ்வாண்டு எடுக்கும் முக்கிய தீர்மானங்கள்

அமெரிக்க அதிபர் டிரம்ப், ஏங்கலா மெர்கல் உள்ளிட்ட தலைவர்கள் பிரான்ஸின் பியரிட்ஸ் நகரில் ஜி7 45 ஆவது உச்சி மாநாடு கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. மாநாடு இன்று வரை நடைபெறுகிறது. ஜி7 என்றால் என்ன? அதில் எந்தெந்த நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதில் என்ன நடக்கும்?

### ஜி7 என்றால் என்ன?

முன்னேறிய நாடுகள் என்று கருதப்படும், வளர்ந்த பொருளாதாரங்களைக் கொண்ட ஏழு நாடுகள் இருக்கும் அமைப்பே ஜி7. அதாவது Group of Seven.

இதில் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. சுதந்திரம், மனித உரிமை, ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு, செழிப்பு மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற முக்கிய கொள்கைகளோடு, தங்கள் சமூகம் இருப்பதாக இந்த நாடுகள் தங்களை கருதிக் கொள்கின்றன.



### இதில் என்ன நடக்கும்?

முதன்முதலில் 1975 இல், உலக பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளை தேடும் முயற்சியில் தங்களின் யோசனைகளை பரிமாற்றிக் கொள்வதற்காக ஆறு நாடுகள் கூடி சந்தித்தன.

அதற்கு அடுத்த ஆண்டு கனடா இந்த அமைப்பில் உறுப்பினரானது. 1998இல் உறுப்பினரான ரஷ்யா உக்ரைனின் அங்கமாக இருந்த கிரிமியாவை தன்னுடன் 2014இல் இணைத்துக் கொண்டதால் நீக்கப்பட்டது. அதன்பின் ஜி8 மீண்டும் ஜி7 ஆனது.

ஆண்டு முழுவதும் அவ்வப்போது, ஜி7 உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், சில முக்கிய விடயங்களை விவாதிக்கக் கூடுவார்கள். ஆண்டுதோறும் இந்த மாநாடு இரண்டு நாள்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நாடு, இதன் தலைவராக சுழற்சி முறையில் இருக்கும். அந்த நாடே அந்த ஆண்டுக்கான மாநாட்டை நடத்தும்.

ஆற்றல் உற்பத்தி கொள்கை, பருவ நிலை மாற்றம், எய்ட்ஸ் மற்றும் உலகபாதுகாப்பு ஆகியவை அங்கே விவாதிக்கப்படும் சில விடயங்களாகும்.

மாநாட்டின் இறுதியில் என்னவெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டனவோ, அவையெல்லாம் அறிக்கையாக வெளியிடப்படும்.

ஜி7 மாநாட்டில் அதன் உறுப்பு நாடுகளின் தலைவர்களோடு, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவரும் கலந்து கொள்வார்கள். பொதுவாக மற்ற நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளும் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படும்.

இந்தாண்டு பியரிட்ஸில் நடைபெறும் மாநாட்டில் சமத்துவமின்மைக்கு எதிராக போராடுவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

### இதனால் என்ன நன்மை

தற்போதைய காலத்திற்கு தொடர்பில்லாமல் இருக்கிறது என்று ஜி7 குழு விமர்சிக்கப்பட்டாலும், இதனால் சில நன்மைகள் கடந்த காலங்களில் நடந்திருக்கின்றன. எய்ட்ஸ், டிபி, மலேரியாவுக்கு எதிராக போராட சர்வதேச நிதி திரட்ட இந்த ஜி7 குழு உதவி இருக்கிறது. இதனால் 2002ஆம் ஆண்டில் இருந்து 27 மில்லியன் மக்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

2016 பாரீஸ் காலநிலை ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்த மாநாடு உந்துகோலாக இருந்ததாக கூறப்படுகிறது.

உலகின் அதிக மக்கள் தொகை மற்றும் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை சீனா கொண்டுள்ளது. எனினும் தனிநபர் சொத்து என்பது குறைவாக இருக்கிறது. ஜி7 உறுப்பு நாடுகளின் பொருளாதாரம் மேம்பட்டிருக்கும் அளவிற்கு சீனா இல்லை என்பதால் அந்நாடு இக்குழுவில் இடம் பெறவில்லை.

### ஜி7 நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

ஜி7 நாடுகளுக்குள் அதிகளவில் கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. இறக்குமதிக்கான வரி மற்றும் காலநிலை மாற்றம் குறித்த பேச்சு வார்த்தைகளில் கடந்தாண்டு கனடாவில் நடைபெற்ற மாநாட்டில் அமெரிக்க அதிபர் டிரம்ப் முரண்பட்டார்.

சமகால சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரங்களை இந்த மாநாடு பிரதிபலிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் எந்த நாடுகளும் இந்த ஜி7 இல் இடம்பெறவில்லை.மேலும் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள், ஜி20 இல் இடம் பெற்றிருந்தாலும் ஜி7 இன் உறுப்பினர்களாக இல்லை.





# இயற்கை சீற்றங்கள் உலக மக்களுக்கு விடுக்கும் சமிஞ்சை, செய்தி என்ன?

இன்று உலகளாவிய ரீதியில் காலநிலையில் கண்காணிக்க தக்க மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றமையும் மிகவும் அவதானத்திற்குரியது.

அண்மைக் காலங்களாக அதாவது இந்த வருடத்தில் கூட தெற்காசிய நாடுகளில் பல இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டமையும் அதனூடான உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிக அளவில் ஏற்பட்டமையும் கண்டு அதிர்ந்து போயுள்ளோம்.

சீனா, நேபாளம், வங்கதேசம், பாகிஸ்தான் இந்தியா போன்ற பல பிரதேசங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் பல உயிர்களை காவு கொண்டிருந்தது.

2016ஆம் ஆண்டு தமிழகம் வரலாற்றில் என்றும் கண்டிராத ஒரு பெரும் மழை வீழ்ச்சியையும், வெள்ளப் பெருக்கையும் உயிரிழப்பையும் சந்தித்திருந்தது.

அதாவது இன்றைய நாள் தொடக்கம் கடந்த ஐந்து வருடங்களுக்குள் இயற்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாற்றங்களை வெறுமனே கடந்து விட்டு போக முடியாது.

இந்த மூன்று வருடங்களுக்குள் அல்லது மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்குள் இயற்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற மாற்றங்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு தனிமனிதனும் கடந்து போகக் கூடிய விடயங்களில் அவை மறந்து அல்லது மறக்கடிக்கப்பட்டு விடுகின்றன.



ஆனால் இந்த குறிப்பிட்ட காலங்களுக்குள் நடைபெற்ற இயற்கை மாற்றங்கள், இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்ற பொழுது இயற்கை இந்த உலக மக்களுக்கு ஏதோ ஒரு செய்தியை சொல்லி வைக்க விரும்புகிறது.

இன்று பல நாடுகளில் இயற்கை சீற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில் அதனால் ஏற்படுகிற காலநிலை மாற்றங்கள், இயற்கை அழிவுகள், உயிரிழப்புகள் என்பன அதிகரித்துச் சென்ற அதே தருவாயில் தற்பொழுது மிகவும் ஆபத்தானதாகவும் மாறிக்கொண்டிருக்கும் இந்த அமேசன் காட்டில் ஏற்பட்ட தீ , அமேசன் காட்டில் நடைபெறுகிற காடழிப்புக்கள் என இவ்வாறு உலகத்தை மூடியுள்ள அத்தனை இயற்கை வளங்களையும் சுரண்டிவிட்டு நாங்கள் வெறுமனே மனித இனம் மட்டுமே புவியில் வாழ முடியும் என்ற இயற்கையை விஞ்சிய சித்தாந்த கோட்பாட்டுக்குள் மனித இனம் மூழ்கி இருப்பதால், இயற்கையோடு இணைந்த வாழ்வு முறைகளை தொலைத்து விட்டதனால் ,ஏதோ செயற்கைகளோடு மட்டும் கூடிக் குலாவி இந்த உலகத்தில் வாழ்ந்து விட முடியும் என்ற மாயை எண்ணத்தினாலும் இன்று இயற்கை தன் வீரியத்தை காட்டத் தொடங்கியிருக்கிறது.

இயற்கையை நேசிக்க முடியாமலும் நேசிக்க தெரியாமலும் அதனோடு இணைந்து வாழ பழகாமையிலும் ,அதனை பகைத்தமையினாலும், இயற்கையை வேண்டாவெறுப்பாக மனித இனம் பார்த்ததனாலும் வந்த விளைவு இன்று இயற்கை இந்த பூமியை விவாகரத்துச் செய்ய ஆரம்பித்து விட்டது.

இயற்கை மனிதனுக்கு மட்டுமல்ல இந்த இயற்கை புவியிலுள்ள எத்தனையோ கோடான கோடி இனங்களுக்குள் ஒன்றான மனித இனமும் வாழும் இடமாக இருக்கிறது.

(10 பக்கம் பார்க்க...)

# ரணிலை வீழ்த்தி சஜித்தைப் பிரதமராக்கும் மைத்திரியின் புதிய முயற்சி தோல்வியாம்!

**கொழும்பு,ஓக.26
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட புதிய முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இழுபறிகள் நிலவி வருகின்றன.

இந்த நிலையில் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கக் கோரி, ஐ.தே.கவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆவணம் ஒன்றைக் கையளித்திருந்தனர்.

இந்த ஆவணத்தின் அடிப்படையில், ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி விட்டு, சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமித்து, புதிய அமைச்சரவையை அமைக்குமாறு கோருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிகளை மேற்கொண்டிருந் தார். எனினும், இந்த முயற்சிகளுக்கு சஜித் பிரேமதாச ஒத்துழைக்க மறுத்து விட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டால், கட்சி யின் ஆதரவாளர்கள் தன்னைக் காட்டிக் கொடுத் தவர் என்று குற்றம்சாட்டுவார்கள் எனவும் அத னால் தன் மீது வெறுப்படைவார்கள் என்றும், சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதிவியேற்றால் அது அரசியல் சதித் திட்டமாகவே அழைக்கப்படும் என்ற அச்சத்தினால், அதற்கு ஒத்துழைக்க அவர் மறுத்து விட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு போன்ற சதித்திட்டம் ஒன்றை நிறைவேற்றும் முயற்சிகள் நடந்து வருகின்றன எனக் கடந்தவாரம் அலரி மாளிகையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஐ.தே.கவின் உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டின்தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மஹிந்தவின் இணைப்பாளராக திஸ்ஸ விதாரண

கொழும்பு,ஓக.26

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தமது இணைப்பாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அண்மையில் கூட்டு எதிரணிக்கும், சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போதே, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளராக, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை நியமிக்கிறார் என மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது இனப்பிரச்சினைத்




தீர்வுக்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமை தாங்கியிருந்தார்.

அந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு அறிக்கை முன்னேற்றகரமான ஒன்றாக வரவேற்கப்பட்ட போதும், மஹிந்த ராஜபக்ஷ அதனை நடைமுறைப்படுத்த இணங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே, தமிழ் மக்களினதும், தமிழ்க்கட்சிகளினதும் ஆதரவைத் திரட்டுவதற்காக, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை இணைப்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

எதிர்காலஅரசாங்கத்தின்கொள்கை அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் திஸ்ஸ விதாரண கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார்.

வன்னி, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் அவர் வெள்ளிக்கிழமை தொடக்கம் நடத்தி வரும் கலந்துரையாடல்கள் நேற்று வரைத் தொடர்ந்தன.

ஏற்கனவே அவர், சி.வீ.விக்னேஸ்வரன், ஆனந்தசங்கரி, சந்திரகுமார், பிரபா கணேசன், வரதராஜப் பெருமாள் உள்ளிட்டவர்களைச் சந்தித்துள்ளார். நேற்றும் பல அமைப்புகளையும் அவர் சந்திக்கவிருந்தார்.

அத்துடன் கிழக்கிலும் முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தெரியவருகிறது.

## நான்கு நாள்களில் மட்டும் 24 பேர் நாடாளுமன்றில் வழுக்கி விழுந்தனர்!

*கொழும்பு, ஓக. 26*

*நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள தரைப் பகுதியைச் சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களால், தரை வழுக்குவதால், இதுவரை 24 பேர் வழுக்கி வீழ்ந்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இவ்வாறு வீழ்ந்தவர்களுள் 6 எம்.பி.க்கள், 14 பெண் ஊழியர்கள் மற்றும் நான்கு வெளிநபர்கள் அடங்குகின்றனர் எனக் கூறப்படுகிறது.*

*கடந்த 20ஆம் திகதி முதல் நான்கு நாள்களாக இந்த வழுக்கும் தன்மை இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)*

## குப்பை ஏற்றிச் சென்ற பாரவூர்தி மீது கல்வீச்சு

கொழும்பு, ஓக. 26

வனாத்துவில்லு – அருவக்காடு கழிவகற்றல் நிலையத்துக்கு குப்பைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி மீது, புத்தளம் – தில்லடி பகுதியில் வைத்து நேற்று முன் தினம் காலை கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, பாரவூர்திக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், அதன் பின்னால் பாதுகாப்புக்காகச் சென்ற பொலிஸ் வாகனத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்த, ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆயர் செய்யப்பட்டு நீதிவான் உத்தரவுக்கமைய, ஓகஸ்ட் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## வவுனியா செட்டிகுளத்தில் நேற்று காலை கோர விபத்து!

### ஒன்பது பேர் படுகாயம்

வவுனியா, ஓக. 26

வவுனியா செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7.40 மணியளவில் ஹைஏஸ் ரக வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வத்தளைப் பகுதியிலிருந்து மடு நோக்கிப் பயணித்த வான் ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகேயிருந்த மின்கம்பத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வானில் பயணித்த 11 பேர் பயணித்த நிலையில் 9 பேர் படுகாயமடைந்து செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ – 100)




## பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரை இரண்டு மாணவர்களின் நடை பயணம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 26

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனை வரையான நடை பயணம் ஒன்றைக் கல்லூரி மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு புனித சென் மிக்கல் கல்லூரியின் இவ்வருடம் உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்கள் இருவரே நேற்று முன் தினம் தமது நடை பயணத்தினை ஆரம்பித்துள்ளனர்.

விஞ்ஞான பிரிவின் சஞ்ஜீவன் மற்றும் கணிதப் பிரிவின் ஜோசாந் ஆகியோர் ஆரம்பித்துள்ள இந்த நடை பயணம் ஏப்ரல் – 21தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் சிதறிப்போயுள்ள இனங்களின் ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் பாதுகாப்பு வலுவான நிலையில் உள்ளதை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்தும் முகமாகவும் இந்த நடைபயணம் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# பும்ரா அபாரம்

இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா, டெஸ்ட் போட்டிகளில் அதிவேகமாக 50 விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

அன்டிகுவா மைதானத்தில் நடைபெற்று வரும் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் போதே, அவர் இந்த முத்திரையை பதித்துள்ளார்.

இவ்வாறு அதிவேகமாக 50 விக்கெட்டு களை வீழ்த்தியதன் மூலம், முன்னாள் வீரர்களான வெங்கடேஷ் பிரசாத் மற்றும் முகமது ஷமி ஆகியோரின் சாதனையை முறியடித்துள்ளார். இவர்கள் இருவரும் 13 டெஸ்ட்களில் இச்சாதனையை படைத்திருந்தனர். ஆனால், பும்ரா 11 டெஸ்ட்டுகளில் இந்த மைல்கல்லை எட்டினார்.



மேலும், அதிவேகமாக 50 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் நரேந்திர ஹிர்வானி மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோருடன் 3ஆம் இடத்தை பகிர்ந்து கொண்டார்.

அதிவேகமாக 50 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் 9 டெஸ்ட்களுடன் அஸ்வின் முதலிடத்திலும், 10 டெஸ்ட் போட்டிகளுடன் அனில் கும்ப்ளே 2 ஆம் இடத்திலும் உள்ளனர்.

எனினும், பந்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் இதில் அஸ்வின் சாதனையை பும்ரா முறியடித்துள்ளார். 50 விக்கெட்டுகளை வீழ்த்த அஸ்வினுக்கு 2,597 பந்துகள் தேவைப்பட்ட நிலையில், பும்ராவுக்கு 2,465 பந்துகள் மட்டுமே தேவைப்பட்டது. (ஐ)

# ஆமிரை மீள அழைக்கிறார் அக்தர்

நாட்டிற்காக சிறப்பாக விளையாடினால் மட்டுமே ஜாம்பவானாக முடியும், ஆகையால் மொஹமட் ஆமிர் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த முடிவை மறு ஆய்வு செய்ய வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் சோயிப் அக்தர், கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் விளையாடவுள்ளது.

ஆனால், பாகிஸ்தான் அணியில் அனுபவ பந்துவீச்சாளர்கள் என கூறும் அளவுக்கு எவரும் இல்லை. ஆகையால் மீண்டும் அவர் டெஸ்ட் போட்டியில் விளையாட வேண்டுமென அக்தர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'ஆமிர் கண்டிப்பாக டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த முடிவை மறுஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் பாகிஸ்தான் அணிக்கு தேவை.

நாட்டிற்காக சிறப்பாக விளையாடினால் மட்டுமே ஜாம்பவான் என்ற பெயரை எடுக்க முடியும். கவுன்டி கிரிக்கெட்டில் விளையாடினால் யாரும் ஞாபகம் வைத்திருக்க மாட்டார்கள்.

மொஹமட் ஆமிர் முடிவை ஹசன் அலியும் பின்பற்றக்கூடும். வஹாப் ரியாஸ், ஜுனைத்கான் ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்டனர். பாகிஸ்தான் அணியில் என்ன நடக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என கூறினார்.

27 வயதான மொஹமட் ஆமிர், கடந்த மாதம் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து திடீரென ஓய்வுப் பெறுகிறார் என அறிவித்தார்.



2009ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில், அறிமுகமான மொஹமட் ஆமிர் இதுவரை 36 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 119 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதில் ஐந்து விக்கெட்டுகளை நான்கு முறை வீழ்த்தியுள்ளார்.

# கோஹ்லி, ரஹானே அரைச்சதம்; வலுவான நிலையில் இந்தியா




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி ரஹானே மற்றும் ஜடேஜா ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் 297 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து முதல் இன்னிங்ஸ்காக துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் இசாந் சர்மா ஐந்து விக்கட்டுக்களையும், பும்ரா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா நான்கு விக்கட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிஸுக்காக துடுப்பெடுத்தாட களமிறங்கியுள்ள இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 3 விக்கட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

விராட் கோஹ்லி 51 ஓட்டங்களுடன், ரஹானே 53 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். போட்டியின் நான்காம்நாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ஐ)

# ஆரம்ப துடுப்பாளராக களமிறங்கும் திறமை கொண்டவர் ரிஷப் பந்த்




மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களம் இறங்கக்கூடிய திறமை ரிஷப் பந்த்திடம் இருப்பதாக, இந்திய அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் விரேந்தர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி, தற்போது மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று வகை போட்டிகளிலும் விளையாடி வருகின்றது.

இதில், அணியின் மூத்த வீரரான மகேந்திர சிங் டோனிக்கு பதிலாக, இளம் வீரர் ரிஷப் பந்த் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில், ரிஷப் பந்த்தின் எதிர்காலம் குறித்து விரேந்தர் சேவாக் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

டோனிக்கான சிறந்த மாற்று வீரர் ரிஷப் பந்த் ஆக இருப்பார் என நான் நினைக்கிறேன். டெஸ்ட் போட்டியில் அவர் தனது திறமையை நிரூபித்துள்ளார். தற்போது மீண்டும் ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட்டில் அவரது திறமையை நிரூபிக்கலாம்.

அவர் சிறிது காலம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவரது ஷொட் தேர்வினை சரி செய்துவிட்டால், இந்திய அணியில் நீண்ட காலமாக விளையாடுவார். இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்களில் அவரை ஆரம்ப துடுப்பாட்ட வீரராக பார்க்கலாம்.

50 ஓவர்கள் மற்றும் ரி-20 ஓவர்கள் போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களம் இறங்கக்கூடிய திறமை அவரிடம் உள்ளது என கூறினார்.

# இயற்கை சீற்றங்கள் உலக ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் அந்த இயற்கையை அந்த கோடான கோடி இனங்களில் ஓர் இனமாக இருக்கிற மனிதன் எப்போது தன் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தானோ, அந்த இயற்கையை செயற்கைகள் கொண்டு எப்போது நிரப்ப ஆரம்பித்தானோ அன்றே உலகத்தின் முடிவு கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து விட்டது.

வெள்ளப்பெருக்கு, புயல், சூறாவளி, சுனாமி, எரிமலை வெடிப்புக்கள், இயற்கை வறட்சி, பூமி பிளவுகள், உறைபனி, கடலரிப்பு, கடல் நகரப் பகுதிக்குள் புகுதல், அரிய இனங்களின் இறப்பு, பனிமலைகள் உருகுதல், கடல் மட்டம் அதிகரித்தல் போன்ற பல இயற்கையின் கோர முகங்களை இயற்கையானது இந்த அண்மைய காலப்பகுதிக்குள் அது அதிகமாக வெளிப்படுத்தி நிற்கிறது. இவை பூமி மிகவும் எதிர்நோக்கி வருகிற மாபெரும் பிரச்சினைகளாகும்.

இந்த மூன்று ஆண்டு காலப்பகுதிக்குள் உலகத்திலேயே நடைபெற்ற அத்தனை இயற்கை அழிவுகளையும் தொகுத்து பார்க்கின்றபோது இயற்கை இந்த பூமிக்கு ஏதோ ஒரு விடயத்தை இந்த பூமியில் வாழும் இனங்களுக்கு ஏதோ ஒரு விடயத்தை காண்பிக்க விரும்புகிறது, சொல்லி வைக்க விரும்புகிறது. இனியும் நீ இயற்கையை நேசிக்கத் தவறினால், இனியும் நீ இயற்கையோடு இணைந்து என்னை நாசமாக்கினால் நான் இந்த பூமியை விவாகரத்து செய்யவும் ,இந்த பூமியை அழிக்கவும் தயாராகி விட்டேன்.

என்ற அந்த ஒற்றைச் சமிஞ்சையை அது எப்போதோ காண்பிக்க தயாராகி விட்டது. அந்த சமிஞ்சையை மனிதர் புரிவதும், புரியாததும் இயற்கைக்கு பரவாயில்லை அது தன் வேலையை தன் கடமையைச் சரியான நேரத்தில் செய்யும்.

கடந்த ஆண்டு மறைந்த அண்டவியல் விஞ்ஞானி மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங் அவர்கள் கூறியமை போல மனிதன் 2050ஆம் ஆண்டுக்குள் இன்னோர் வாழ கூடிய கிரகத்தை கண்டு பிடித்து குடியேறி விட வேண்டும் என்று சொல்லிவிட்டு மறைந்திருக்கிறார் .

ஆகவே எல்லாக் கூற்றுக்களும் மெய்ப்படும் விதமாக இன்று இயற்கை மனித இனத்திற்கு ஓர் அபாய சமிஞ்சையை வெளிப்படுத்த ஆரம்பித்து இருக்கிறது.

இந்த சமிஞ்சையை புரிந்து கொண்டு மனித இனம் மற்ற இனங்களுக்கும் ஆக இந்த இயற்கையை பாதுகாத்து தற்காத்துக்கொள்ளுமா!!!

இல்லை 2050 இல் வேறொரு யாருமற்ற கிரகத்துக்கு குடி பெயர வேண்டுமா?? என்பதை இனி ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மக்களும், ஒவ்வொரு தனி மனிதனும் சிந்திக்க வேண்டிய தருணம் நெருங்கி விட்டது.

## என் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் கோட்டாபயவுக்கு வாக்களிப்பதன் மூலமே மஹிந்த தனது கட்சிக்குள் காணப்படும் தமிழ் விரோத சக்திகளிடம் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த தமிழ் மக்களின் எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டுவதுடன் தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்கியே நாங்கள் செயற்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தும் சூழல் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கும் யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள், அரசியல் வாதிகளுக்குமிடையிலான சிறப்பு அரசியல் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு நீண்ட உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மஹிந்த ஜனாதிபதியாக விருந்தபோது இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு நான் தலைமை தாங்கியிருந்தேன். எங்கள் குழு அறிக்கையொன்றைத் தயாரித்து மஹிந்தவிடம் சமர்ப்பித்திருந்தோம். இந்த அறிக்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் திருப்தியளிக்கக் கூடிய வகையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எனினும், போர் முடிவடைந்து குறுகிய காலமென்பதால் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டுமென்ற காரணத்தாலேயே எமது குழுவின் அறிக்கை தொடர்பில் மஹிந்த கவனம் செலுத்தவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் காணப்படும் களநிலைமை தான் மஹிந்த குழுவினர் தமிழ் மக்களுக்குச் சார்பான தீர்மானங்களை எடுப்பார்களா? என்பதைத் தீர்மானிக்கும்.

தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பதன் மூலம் மஹிந்தவின் தமிழ் நல்லெண்ணக் கரங்கள் பலப்பட்டு விடும் - என்றார். (ஐ-07)

## தெரிவுக்குழுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கான திகதி மற்றும் நேரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திகதி கொடுத்தால், அதன் பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் ஆஜராகமாட்டேன் என அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தெரிவுக் குழு முன் ஆஜராகாவிட்டாலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் எனப் பிரதிச் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஆயுட்காலம் ஓகஸ்ட் 23 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்த நிலையில், அது செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சுமந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாண சபைத் தேர்தலைகளை நடத்துவதில் தற்போதைய அரசில் பிரச்சினை நிலவுகின்றது. ஆனால் அதனை நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்து வருகின்றார். ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் போட்டித்தன்மை நிகழ்கின்றது. இந்நிலையில் ஒரு பக்கம் சார்ந்து கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தனி நபர் பிரேரணையைச் சமர்ப்பித்திருக்க முடியும். ஆனால் அது முக்கியமல்ல.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையில் இருக்கின்றோமா என ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானம் கோரியுள்ளார். எனினும் நீதிமன்றத்தினால் அரசுக்கு அறிவுரை மட்டுமே கூற முடியும். இதனைச் செய், அதனைச் செய் எனக் கூற இயலாது.

எனவே இவ்வாறான நிலையிலும் ஜனாதிபதி நீதிமன்றில் ஏன் வியாக்கியானத்தைக் கோரினார் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்த முடியும் எனக் கூறினால் கூட அதனை அரசால் நிராகரிக்க முடியும். இதனால் மாகாண சபைத் தேர்தல் நடைபெற வாய்ப்புக்கள் மிக குறைவாகவே உள்ளன.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டு வருகின்றார் எனில் தனிப்பட்ட உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கும். இவ்வாறான நிலையில் மாகாண சபை தேர்தல் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவோ அல்லது இந்த வருடத்திலோ நடைபெற வாய்ப்புக்கள் இல்லை என்பதே எனது கருத்து - என்றார். (ஐ-07)

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்ட கட்சியின் செயற்குழுவுக்குப் புதிதாக 30 உறுப்பினர்களை ரணில் நியமிக்கவுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் ஏற்கனவே செயற்குழு இரண்டாகப் பிரிந்துள்ள நிலையில் ரணில் மேலும் 30 பேரை நியமிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் இப்போது நடந்து வருகின்றன.

சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது தொடர்பில் செயற்குழுவில் பகிரங்க வாக்கெடுப்பை ரணில் நடத்தினால் பகிரங்கமாக யாரும் சஜித்தை ஆதரிக்கமாட்டார்களெனக் கருதப்படுகிறது.

இப்போது ரணிலால் நியமிக்கப்படவுள்ள செயற்குழு உறுப்பினர்கள் 30 பேரும் ஏற்கனவே செயற்குழுவில் இருக்கும் ரணில் சார்பானவர்களும் ஆதரவளிக்கும் பட்சத்தில் வேட்பாளர் தெரிவில் ரணிலின் கையே மேலோங்குமெனச் சொல்லப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலும் செயற்குழுவிலும் தீர்மானம் எடுக்கப்பட்டு அது கட்சித் தலைவரின் அங்கீகாரத்துக்குச் செல்லவேண்டும்.

பிந்திய இந்த நிலைவரம் கட்சிக்குள் இப்போதிருக்கும் நிலைமையை மேலும் மோசமாக்கலாமென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் திட்டவட்டமாக அறிவித்தார் லங்கா நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண.

யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதி மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பின் எமது நாட்டின் நீதித்துறை ஊடாக விசாரிக்க முடியும். நாட்டில் இராணுவத் தளபதி நியமனத்தில் சர்வதேசம் தலையிட முடியாது. எமது நாட்டுக்கு என்று இறையாண்மை உள்ளது. அதனை அனைவரும் பாதுகாக்க வேண்டும்.

19 ஆவது திருத்தச் சட்டவரைவு ஊடாக எதிர்வரும் ஜனாதிபதி பெரளவிலேயே அதிகாரம் அற்ற ஜனாதிபதியாக இருப்பார். பாதுகாப்பு அமைச்சு கூட அவரிடம் இருக்காது. முழுமையான அதிகாரமும் பிரதமராக வரும் மஹிந்த ராஜபக்ஷவிடமே இருக்கும். எனவே கோட்டாபய குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் தீர்ப்பதற்கு மஹிந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதாவது என்னைக் கூட்டு எதிரணியில் உள்ள தமிழ்க் கட்சிகளின் இணைப்பாளராக நியமித்து அந்தக் கட்சிகளுடன் இணைந்து தீர்வுக்கான யோசனைகளைப் பெற்று அறிக்கையிடுமாறு மஹிந்த கேட்டுள்ளார். இதன் பிரகாரம் நான் தமிழ்க் கட்சிகளிடம் தீர்வுக்கான யோசனைகளைக் கேட்டுள்ளேன். அத்துடன் அவர்களுடன் பேச்சுக்களையும் நடத்தி வருகின்றேன். கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் வைத்து ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து உரையாடினேன்.

இதனையடுத்து அன்று மாலை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது கோட்டாபயவுக்கு ஆதரவு அளிக்க முடியாது எனக் கூறினார். இந்நிலையில் அரசியல் தீர்வு தொடர்பில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவராக இருந்து செயற்பட்ட விதம் மற்றும் விடயங்கள் குறித்துப் பேசினேன். இது தொடர்பான பேச்சுக்கள் சாதகமாக இருந்தன. கொழும்பில் இது தொடர்பாக மேலதிகமாகப் பேசுவதாகக் கூறியுள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மஹிந்தவே இந்த அனைத்துக் கட்சிகள் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவின் அறிக்கையைக் கையளித்ததும் இது குறித்து தங்களின் கூட்டணி கட்சிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார். இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதில் மஹிந்த வென்றதும் அபிவிருத்திகளை முன்னெடுத்தார்.

இதனையடுத்து 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிய அரசு ஆறு மாதத்தில் புதிய அரசியல் தீர்வுக்காக அரசமைப்பை உருவாக்குவதாக கூறியது. எனினும் நான்கு வருடங்கள் கடந்தும் இன்றுவரை எதுவும் நடைபெறவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திர கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஒன்றுபட்டு செயற்பட்டபோதும் இவர்களினால் தீர்வை காணமுடியவில்லை. அனைத்துக் கட்சிகள் குழுவின் அறிக்கையை முன்னிறுத்தி கட்சிகளுடன் பேசினால் கூடத் தீர்வை கண்டிருக்க முடியும். இனிவரும் புதிய ஆட்சியில் வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் கட்சிகளுடன் பேசித் தீர்வை காண நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-07)

## கை - மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு இந்த மாத இறுதிக்குள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

பரந்துபட்ட கூட்டணி அமைத்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் இதுவரையில் ஆறு கட்ட பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. நிறைவடைந்த பேச்சுக்களில் இரு தரப்பின் கொள்கைத் திட்டங்களும் ஒருமுகப்படுத்தி கட்சியாப்பு உருவாக்கும் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து பரந்துபட்ட கூட்டணி குறித்த பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்று கடந்த 11 ஆம் திகதி அந்தக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவால் அறிவிக்கப்பட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனித்து வேட்பாளரை அறிவித்துள்ளமையால் பரந்துபட்ட கூட்டணி குறித்த பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது பயனற்றது என்றும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்த முடியும் என்றும் இரு மாறுப்பட்ட கருத்துக்கள் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் பரந்துபட்ட கூட்டணி விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நாளை மறுதினம் இரு கட்சிகளும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளன. (ஐ)

## இராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட வழக்கில் கலிபோனியா மத்திய மாவட்ட நீதிமன்றத்தில் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் புதிய மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டை மறுப்பதுடன் குற்றச்சாட்டு உண்மையாக இருக்கின்ற பட்சத்திலும் கூட இராஜதந்திரி என்ற ரீதியில் வெளிநாட்டு அலுவலர் சலுகை அடிப்படையில் இந்த வழக்கை அணுகவேண்டும் எனக் கோட்டாபயவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டின் முறைப்பாடு உண்மையாக இருக்கும் என்ற ஊகத்தில் கூட இவ் வழக்கில் சட்டப்பூர்வ ஆதாரப் பற்றாக்குறை இருப்பதாக கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டதரணிகள் தெளிவுப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் என்ற ரீதியில் இலங்கையர்கள் இவ் வழக்கை உன்னிப்பாக அவதானித்து வரும் வேளையில் கோட்டாபய இக் கருத்தை நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இக்குற்றச்சாட்டை கோட்டாபய வன்மையாக மறுக்கிறார் என்றும் அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

லசந்த விக்ரமதுங்கவின் மகளான அஹிம்ஷா விக்கிரமதுங்க தொடுத்துள்ள இந்த வழக்கில் இலங்கையின் பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய அதிகார மட்டத்திலேயே இதனை புரிந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ் வழக்கில் பொது சட்ட வெளிநாட்டு அலுவலர் சலுகையின் கீழ் விசாரித்து இந்த வழக்கை தள்ளுப்படி செய்ய வேண்டும் என ஜனாதிபதி வேட்பாளரான கோத்தாபயவின் சட்டத்தரணிகள் அமெரிக்க நீதிமன்றத்தில் எடுத்துரைத்துள்ளனர். (ஐ)

## கோட்டாபயவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவே இருக்கின்றோம் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஆரம்பத் தலைவர் அமரர் நடராசா தங்கத்துரை அவர்களது 71 ஆவது பிறந்த தினம் நேற்று வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டு மைதானத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துகளை தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களில் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகின்றார். குற்றச்சாட்டுக்களில் முக்கியமான நபரான இன்னொருவர் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வருவதற்கு துடித்துக் கொண்டிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்றவற்றில் உள்ள தலைவர்கள் அனைவரும் போர்க் குற்றத்துடன் தொடர்புடையவர்கள். உள்நாட்டுப் போரில் நடைபெற்ற இனப்படுகொலைகளில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

எத்தனையோ விசாரணைகள், ஐ.நா. மனித உரிமை பேரவையால் விசாரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுவரும் முக்கிய குற்றவாளிகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நபரான சவேந்திர சில்வாவுக்கு இராணுவதளபதி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக மைத்திரி அரசு தமிழர்களுக்கும், சர்வதேசத்துக்கும் எதிராக ஓர் போர்ப் பிரகடனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சவேந்திர சில்வாவின் பதவிக் காலம் முடிய இன்னும் சிறிது காலம் இருப்பதாகக் கூறுகின்றனர். அப்படியானால் இராணுவத் தளபதியாக இருந்த மகேஷ் சேனாநாயக்காவுக்கு கால நீடிப்பை வழங்கி இருக்கலாம். பலராலும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள சவேந்திர சில்வாவுக்கு நியமனம் அவசரமாக வழங்க வேண்டியதன் நோக்கம் என்ன? இலங்கை அரசு எப்போதும் சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் செயற்படும் என்பதையே இந்தச் செயற்பாடு எடுத்துக்காட்டியுள்ளது.

தமிழர்களாகிய நாம் எம்மை நாமே ஆளும் அதிகாரம் கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம். அந்த அதிகாரம் கிடைக்க மறுக்கப்படும் சூழ்நிலையில் சுதந்திர தனி நாடாக உருவாகவே வழிவகுக்கும். அதனை தென்னிலங்கை கட்சிகளே முடிவெடுக்க வேண்டும். என்ன நோக்கத்துக்காக உயிர்த் தியாகங்கள் இடம்பெற்றனவோ அவை முழுமையாக பெறும் வரை ஓயமாட்டோம் - என்றார். (ஐ-07)

# வெண்ணெய் திரண்டுவரும்வேளையில் ஐ.தே.க. பானையை உடைக்கக்கூடாது!

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

**கொழும்பு, ஓக. 26**
**வெண்ணெய் திரண்டுவரும்போது பானையை உடைக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் செயற்படக்கூடாது. எதிரிகளை வீழ்த்துவதற்கு ஒற்றுமையே வலிமையான ஆயுதம் என்பதைப் புரிந்துசெயற்பட்டால் மாத்திரமே தேர்தலை வெற்றிகரமாக எதிர் கொள்ள கூடியதாக இருக்கும்.**

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டி, கம்பளையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அபர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளையில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் இரு அணிகளாக பிரிந்து நின்று சொற் சமரில் ஈடுபட்டுவருகின்றனர். புதிய அரசியல் கூட்டணியோ அல்லது ஜனாதிபதி வேட்பாளரோ இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் இவ்வாறு கருத்து மோதலில் ஈடுபடுவதானது ஏனையக் கட்சிகளுக்கே களம் அமைத்துக்கொடுக்கும்.

கட்சியின் மத்திய செயற்குழுவில் கலந்துரையாடி தீர்மானிக்கவேண்டிய விடயங்களை சந்திக்குகொண்டுவருவதானது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி தவறான விம்பத்தை உருவாக்கிவிடும் என்பதையும் புரிந்து செயற்பட வேண்டும்.

குறிப்பாக ஒற்றுமையைக் கருதியே ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்யும் பொறுப்பை ஐக்கிய தேசியக்கட்சிக்கே வழங்கினோம். எங்களின் இந்த விட்டுக்கொடுப்பை – தியாகத்தை எவரும் பலவீனமாகக் கருதி செயற்படக்கூடாது. கூட்டணி ஜனநாயகத்தை மதிப்பதாலேயே மிகவும் கௌரவமான முறையில் பங்காளிகளாகச் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே, கட்சிக்குள் கலந்துரையாடல்களை நடத்தி, மக்கள் மனநிலையை அறிந்து, மக்களால் கோரப்படும் வெற்றிவேட்பாளரை களமிறக்கும் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி கூடிய விரைவில் எடுக்கவேண்டும்.

நாட்டின் எதிர்காலம், வெற்றிவாய்ப்பு உட்பட இதர காரணிகளையும் கருத்திற்கொண்டே வேட்பாளர் தீர்மானிக்கப்படவேண்டும்.

மாறாக தான்தோன்றித்தனமாக – மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழந்த வேட்பாளர்களை போட்டிக்காக நிறுத்தக்கூடாது. அவ்வாறு நடைபெற்றால் அதற்கு எதிராகவே நாம் செயற்படுவோம். ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு கையாளவேண்டும் என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்கனவே ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும், கூட்டணி அரசாங்கத்துக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு கூட்டு எதிரணி சதித்திட்டம் தீட்டிவருகின்றது. எனவே, இந்த சதிகார வலையில் எவரும் சிக்கவேகூடாது. அரசியல் ரீதியிலான தீர்மானங்களை எடுக்கும்போது விழிப்பாகவே இருக்கவேண்டும்.



ராஜபக்ஷாக்களின் ஆட்சிக் காலத்திலேயே நாட்டில் அராஜகங்கள், அட்டூழியங்கள் தலைவிரித்தாடின. ஜனநாயகம் என்பது குழிதோண்டி புதைக்கப்பட்டது. இப்படியான இருண்ட யுகத்துக்குள் இருந்து ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணியே நாட்டை மீட்டெடுத்தது.

இது மக்களுக்கும் தெரியும். எனவே, மீண்டும் இருண்ட யுகத்துக்குள் பயணிக்காது, மீட்டெடுத்த சுதந்திரத்தை, ஜனநாயகத்தை தக்கவைத்துக்கொள்வதே சிறந்த முடிவு என்பதை மக்களும் தற்போது உணர ஆரம்பித்துள்ளனர். ஆகவே, மக்கள் மத்தியில் வீண் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் செயற்படக்கூடாது." என்றார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.12, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576




கசூரினா படகுச் சேவை தொடர்புகளுக்கு: 077 833 9303
077 078 3949, 077 355 7959 Email: kasurina.boat@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2019 இல் வெளியிடப்பெற்றது.